# கிராம நூலகக் கையேடு

அ. திருமலைமுத்துசுவாமி
தலைவர், நூலகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
1979

விலை ரூ. 2

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# கிராம நூலகக் கையேடு


அ. திருமலைமுத்துசுவாமி

எம். ஏ., எம். லிட்., எம். லிப். எஸ்சி., பி. டி.

தலைவர், நூலகவியல் துறை

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

ம து ரை



நூலகவியல் துறை

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பல்கலைநகர், மதுரை-625 021

1979

மதுரை காமராசர் பல்கலைக் கழக நூலகவியல்துறை வெளியீடு—1
முதற்பதிப்பு 1979

உரிமை பதிவு

கிடைக்குமிடம் :

**மதுரை காமராசர் பல்கலைக் கழக மத்திய கூட்டுறவு அங்காடி**
பல்கலைநகர், மதுரை-625 021
மதுரை மாவட்டம்

அச்சிட்டோர் :

மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கூட்டுறவு அச்சகம்
பல்கலைநகர், மதுரை-625 021

# நான் முகம்

"கிராம நூலகக் கையேடு" என்னும் இச்சிற்றேடு மதுரை காமராசர் பல்கலைக் கழக நூலகவியல் துறையின் முதல் படைப்பாகும். இம் முதற் படைப்பு தன்னிகரில்லா நமது தாய்மொழியாகிய தமிழ்மொழியிலே வெளிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

நமது பாரதமணித் திருநாடு பல கிராமங்களால் ஆயது. கிராமங்கள் வலுவும் பொலிவும் பெற்றால்தான் நமது தாய் நாடு உலக அரங்கில் ஓர் உயர்ந்த இடத்தைப்பெற முடியும். கிராமங்கள் சிறக்க வேண்டுமெனின் கிராம மக்கள் கல்வி அறிவுடையவர்களாக விளங்க வேண்டும். அதற்கு அரசு கிராமங்கள் அனைத்திலும் பள்ளிகளையும் நூலகங்களை யும் அமைக்க வேண்டும். நேரு பெருமகனார் கூறியபடி ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு நூலகம் அவசியம் தேவைப் படுகிறது. அந்நூலகத்தின் சிறப்பினை புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

> "மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும்
> மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
> தனிமனித தத்துவமாம் இருளைப்போக்கி
> இலகுவது புலவர்தரும் சுவடிச்சாலை"

என்று பாங்குடன் பாடியுள்ளார்.

கிராம நூலகங்களை நன்கு அமைப்பதில் ஓரளவு துணையாக இச்சிறுநூல் விளங்கும் என்ற நம்பிக்கையில் இந்நூல் வெளியிடப்படுகின்றது. இதனை எழுதி வெளி-யிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த நமது பல்கலைக் கழக இருபெருந் துணைவேந்தர்களாகிய பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு அவர்கட்கும் டாக்டர் வர. செ. குழந்தைசாமி அவர்கட்கும், இதனை வெளியிடுவதற்கு இசைவு அளித்தும், பொருள் வழங்கியும் உதவிய பல்கலைக் கழக ஆட்சிக் குழுவினருக்கும் நான் என்றென்றும் கடப்-பாடுடையேன். இதனை மிகக் குறுகிய காலத்தில் நல்ல முறையில் அச்சிட்டு உதவிய மதுரை காமராசர் பல்கலைக் கழக கூட்டுறவு அச்சகத்தினருக்கு எனது பாராட்டினை நான் தெரிவிக்கின்றேன்.

நூலகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
பல்கலைநகர், மதுரை-625 021
டிசம்பர், 1978

அ. திருமலைமுத்துசுவாமி

# பொருளடக்கம்


| | | பக்க எண். |
|---|---|---|
| 1. | கிராம நூலகம் | 1 |
| 2. | கிராம நூலக நூல்தொகுதி | 10 |
| 3. | கிராம நூலக ஆட்சி | 24 |

# 1. கிராம நூலகம்

கிராம நூலகத்தின் சிறப்பு

''எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆவான்'' என்பது தமிழ் முதுமொழி. கிராமங்கள் நிறைந்த நமது நாட்டில் படிப்பறியாத கிராம மக்களுக்கு கல்விச் செல்வத்தை அளிக்கும் பணி, சமூகப் பணிகளில் எல்லாம் மகுடம் போன்றதாகும். ''கிராமத்திற்கு இது இல்லை - அது இல்லை என்றில்லாமல் - இல்லாதது எதுவும் இல்லை என்று சொல்லத்தக்க அளவில் நகரத்தில் உள்ள வசதிகள் அனைத்தையும் கிராமங்களுக்குச் செய்ய வேண்டும்'' என்பது நமது அரசின் உள்ளக் கிடக்கை ஆகும். கிராம மக்களின் அறிவு விளக்கைத் தூண்டி, ஏற்றம் காணுகின்ற திருப்பணியைச் செய்யக் கூடியது கிராம நூலகமே ஆகும்.

கிராம மக்களது சீரிய வாழ்விற்கு, சிறந்த நிலைக்கு, வாழ்வாங்கு வாழும் நெறிக்கு, வாழ்க்கை வளத்திற்கு வழிவகுப்பன கிராம நூலகங்கள் என்பதை அனைவரும் அறிவோம். எனவே ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நூலகம் அமைக்க வேண்டியது நமது தலையாய கடமை ஆகும்.

நமது தாய்நாடு ஒரு விவசாய நாடாகும். அத்துடன் அது எண்ணிறந்த கிராமங்களைக் கொண்டதாகும். ஏறத்தாழ நமது மக்களில் எண்பது சதவிகிதத்தினர் கிராமங்களில்தான் வாழ்ந்து வருகின்றனர். கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாக நமதுநாடு அந்நியர் ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந்த பொழுது, நமது கிராம மக்கள் அனைவரும் அடியோடு புறக்கணிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இன்று நமதுநாடு உரிமை பெற்றதாக விளங்குகின்றது. நமது நாட்டை நாமே ஆளுகின்றோம். எனவே கிராம மக்களது நலத்தைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். அதற்குக் காரணம் கிராம மக்களே நமது நாட்டின் உயிர்நாடியாக, முதுகெலும்பாக விளங்குவதே ஆகும். நமது நாட்டினத்துக்குரிய வாழ்க்கையின் அடித்தளமாக அவர்கள் விளங்குகின்றார்கள். அத்துடன் நமது நாட்டின் குறிக்கோள்களில் பல கிராம மக்களது வாழ்க்கையில் இரண்டறக் கலந்திருப்பதை நாம் காணலாம். கிராமப் பஞ்சாயத்துக்கள் அல்லது கிராம

ஆட்சி மன்றங்களின் வழியாகக் குடியாட்சி, எளிமை, கடும் உழைப்பு, வாய்மை, பணியினைச் செவ்வனே ஆற்றும் திறன் முதலிய பண்புகளுக்கு இன்று உறைவிடமாக கிராம மக்கள் விளங்குகின்றனர். எனவே அவர்களைக் கல்வி அறிவுடையவர்களாக விளங்கச் செய்ய வேண்டியது நமது கடமை ஆகும். அதற்குத் துணையாக விளங்குவது கிராம நூலகமே ஆகும்.

கிராம நூலகத்தின் நோக்கங்கள்

கிராம நூலகத்தின் முக்கிய நோக்கங்கள் அல்லது குறிக்கோள்கள் பின் வருவனவாகும் :

1. கிராம நூலகமானது கிராமத்தில் வாழும் குழந்தைகள், முதியவர்கள் கல்வியின் சிறப்பையும், கல்வி அறிவால் பெறுகின்ற பயன்களையும் உணர்வதற்கு உறுதுணையாக விளங்க வேண்டும். மேலும் அது கிராம மக்கள் பள்ளிப்படிப்பால் தாம் ஏற்கனவே பெற்றிருக்கின்ற ஓரளவு கல்வி அறிவினைப் புதுக்கியும் பெருக்கியும் கொள்வதற்குப் பயன்பட வேண்டும்.

2. உழவினால்தான் நம்நாடு உயரமுடியும் என்பதை உள்ளத்திலே கொண்டு, அதனையே உயர் தொழிலாகக் கொண்டு, நாட்டு மக்கள் அனைவர்க்கும் உண்டி கொடுக்கும் உத்தமர்களாகிய உழவர்களுக்கு உயிர்க் குருதியாக கிராம நூலகம் விளங்க வேண்டும். உற்பத்தித் திறனைப் பெருக்கவும், மண்வளம், பயிர்கள், விற்பனைக் களங்கள், கால்நடைகள் ஆகியவைபற்றி உழவர்களின் அறிவை வளர்க்கவும், கூட்டுறவுகள், வேளாண்மைக் கருவிகள், வேளாண்மைத் தொடர்புடைய அடிப்படைப் பொறியியல் ஆகியவைபற்றி உழவர்கள் அறிந்து கொள்ளவும் கிராம நூலகம் உதவ வேண்டும். மண் வளத்தைப் பெருக்குவதற்குரிய வழிமுறைகளை உழவர் அறிந்து கொள்ளவும், மழை, வடிகால் பற்றியும், மர வளர்ப்புக் குறித்தும் உழவர்கள் தெரிந்து கொள்வதற்குக் கிராம நூலகம் உதவியாக இருக்க வேண்டும்.

3. இந்தியாவின் சமூக, அரசியல், பொருளாதாரத் திட்டங்களை உழவர்கள் புரிந்து கொள்வதற்குக் கிராம நூலகம் உதவுதல் வேண்டும். மக்கள் தொகை, கிராமங்களிடையே நல்லுறவு, தொழில் உறவுகள் ஆகியவை பற்றியும் கிராம மக்கள் அறிந்து கொள்ள கிராம நூலகம் உதவ வேண்டும்.

4 முழுமையான குடும்ப வாழ்க்கையை உருவாக்குவதற்கு உதவியாகக் கிராம நூலகம் இருக்க வேண்டும்; சமுதாயம் பற்றிய

பல்வேறு தகவல்களையும், சுகாதாரம், குழந்தை வளர்ப்பு, குடும்பக் கட்டுப்பாடு, அடிப்படைக்கல்வி ஆகியவை பற்றியும் கிராமவாசிகள் தெரிந்து கொள்ள நூலகம் உதவிபுரிய வேண்டும்.

5. கிராம மக்களிடையே ஆழமாக வேரூன்றியிருக்கும் வகுப்புவாதம், சாதிப்பற்று, தீண்டாமை, குறுகிய மனப்பான்மை ஆகியவற்றை ஒழிப்பதற்குரிய நூல்களை நூலகம் பெற்றிருக்க வேண்டும். நவ இந்தியாவை உருவாக்குவதில் கிராம மக்களின் முக்கிய பங்கினை அவர்களுக்கு உணர்த்தவும் நூலகம் முயல வேண்டும்.

6. நூல்கள், துண்டு வெளியீடுகள், திரைப்படங்கள் முதலியவை மூலமாக, கிராமத்திலுள்ள ஒவ்வொருவரும் அறிவுத் தெளிவும், ஊக்கமும், பொழுதுபோக்கும் பெறுவதற்குக் கிராம நூலகம் உதவ வேண்டும்.

கிராம நூலகத் திட்டங்கள்

மேற்கூறிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பின்வரும் திட்டங்களைக் கிராம நூலகம் செயல்படுத்தல் வேண்டும்:-

1. கிராமத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு நூல்களைச் சேகரித்து, அவற்றைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு வழிவகை செய்தல்.

2. நூல்களையும், பருவ இதழ்களையும், செய்தி இதழ்களையும் வாசகர்கள் படிப்பதற்கு வசதியான படிப்பறை ஒன்றுக்கு வகை செய்தல்; செய்தியறிவிப்பு, கல்வி, பொழுதுபோக்கு இவற்றுக்கும் தகுந்த இடங்களைக் காணுதல்.

3. வீடுகளில் படிப்பதற்கு நூல்களையும், மற்றப் படிக்கும் சாதனங்களையும் வழங்குதல்.

4. கிராமத்திலுள்ள அமைப்புகளுக்குத் தேவையான நூல்களை வழங்கி உதவுதல்.

5. கண்காட்சிகளையும், நூற்காட்சிகளையும் ஏற்பாடு செய்தல்; செவிகட்புலச் சாதனங்களைப் பயன்படுத்துதல்.

6. குழுக்கலந்துரையாடல்களுக்கும், குழுநடவடிக்கைகளுக்கும் ஏற்பாடு செய்தல்.

இன்றையக் கிராம நூலகப் பணிகள் அளவிலும் தரத்திலும் பெருமளவில் முன்னேற்றமடைய வேண்டிய நிலையிலுள்ளன. பொதுவாக, ஒரு கிராம நூலகத்தில் குறைந்த அளவு நூல்களே இருக்-

கின்றன. அந்தந்த வட்டாரத்திலுள்ள, பெரிய நூலகத்திலிருந்து நூல்களைக் கடன் வாங்கியும் கிராம நூலகம் பணிபுரியலாம். கிராமத்திலுள்ள மக்கள்தாம் கிராமநூலகத்தைப் பயன்படுத்தக் கூடியவர்கள். சில கிராமங்களில் நிலையான நூலகங்கள் உள்ளன; சில கிராமங்களில் அவ்வப்போது ஊர்தி நூலகங்கள் வந்து நூல்கள் வழங்குகின்றன. எனினும், இந்தியாவில் பெரும்பான்மையான கிராமங்கள், நிலையான நூலகமோ, ஊர்தி நூலகமோ எதுவுமே இல்லாமலிருக்கின்றன. இந்நிலையில், கிராம நூலகப் பணியை உருவாக்குவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தவறான கருத்து

கிராம மக்களில் பெரும்பாலோர் கல்வி அறிவில்லாதவர்களாக உள்ளனர். ஒரு சிலர் ஓரளவு கல்வியறிவுடையவர்களாக விளங்குகின்றனர். மற்றுஞ் சிலர் கல்வி கற்க இப்பொழுது தொடங்கியுள்ளனர். இந்நிலைகளில் இருக்கும் கிராம மக்கள், எவ்வாறு நூல்களைப் படிக்க இயலும் என்று ஒரு சிலர் எண்ணலாம். அவ்வாறே நூலகங்கள் "கற்றவர்களுக்காகத்தான் இயங்கி வருகின்றன என்று நம்மில் பலர் நினைக்கலாம். அது தவறான முடிவாகும். கல்வி அறிவில்லாத காரணத்தால் கலங்கித் தவிக்கும் மக்களுக்கு அக்கல்வி அறிவினை அள்ளி அள்ளி வழங்கும் தகுதியினை நூலகங்களே கொண்டுள்ளன. கல்வி அறிவில்லாத மக்களுக்கு அதனை வழங்கி, அவர்களைக் கலையுணர்வுடையவர்களாக, கற்றறிந்தவர்களாக ஆக்க வேண்டிய பொறுப்பு இன்று நூலகங்களைச் சார்ந்ததாகும். அது இன்றையச் சூழ்நிலையில் நூலகங்களின் தலையாய பணிகளில் ஒன்றாகக் கூட விளங்குகின்றது என்று கூறினும் மிகையாகாது. பொது மக்களிடையே கல்வி அறிவைப் பரப்புவதற்குரிய சிறந்த சாதனமாக இன்று நூலகம் கருதப்படுகிறது. சிறப்பாக, கிராமங்களில் வாழும் மக்களை மாண்புடைய மக்களாக ஆக்கும் கல்வியறிவைப் பரப்புவதற்குரிய சிறந்த சாதனமாக இன்று நூலகம் எண்ணப்படுகிறது. அதாவது கிராம மக்களை பண்புடைய மக்களாக ஆக்கும் கல்வி நெறியை வளர்ப்பதற்குக் கிராம நூலகங்கள் பெரிதும் துணை செய்யும்.

இரண்டு முடிவுகள்

இன்று நம்நாட்டில் பல கிராம நூலகங்கள் ஏற்கெனவே அறிவுப் பணியில் ஈடுபட்டுள்ளன. இன்னும் பல நூலகங்களை நாம் அமைக்க இருக்கின்றோம். கிராம நூலகங்களை மக்கள் நன்கு பயன்படுத்தி, நன்மைகள் பலவற்றைப் பெற வேண்டும் எனின், பின்வரும் இரண்டு பொருட்களைப் பற்றி நாம் நன்கு சிந்தித்து

நல்லதொரு முடிவிற்கு வரவேண்டும். ஒன்று, கிராம நூலகங்களுக்கு வாங்க வேண்டிய நூல்கள் எத்தகையனவாக இருக்கவேண்டும் என்பது பற்றி ஆராய்ந்து ஒரு முடிவிற்கு வருதல் ஆகும். மற்றொன்று, கிராம நூலகங்களை மக்களுக்குப் பயனுள்ளவையாக ஆக்கும் பணியில் ஈடுபடக்கூடிய ஆற்றலும், அறிவும், அனுபவமும் உடைய, அதாவது தக்காரை நூலகர்களாக அந்நூலகங்களுக்கு நியமிப்பது பற்றி ஒரு முடிவினை எடுத்தல் ஆகும்.

### கிராம நூலகச் செல்வங்கள்

கிராம மக்களில் பெரும்பாலோர் கல்வி அறிவில்லாதவர்களாக விளங்குகின்றனர் என்பதை நாம் முன்னர்க் கண்டோம். எனவே அவர்களுக்காகத் திறக்கப்படும் கிராம நூலகங்களில் எளிய நடையில் எழுதப் பெற்றதும் விளக்கப் படங்களுடன் கூடியதும், தடித்த எழுத்துக்களில் அச்சிடப் பெற்றதும் ஆகிய நூல்களே முதலிடம் பெறுதல் வேண்டும். பட விளக்கங்கள், அவர்களது கண்ணையும், கருத்தையும் ஈர்ப்பனவாக இருத்தல் வேண்டும். நூலில் அச்சிடப் பெற்றிருக்கும் எழுத்துக்கள் பெரியவையாக, அதாவது தடித்தவையாக விளங்கின், அவர்கள் சிரமம் எதுவும் இன்றி எளிதாக நூலைப்படிக்க இயலும். அடுத்து அவர்களுக்கு விருப்பமான பொருள்கள், அவர்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய பொருள்கள், அவர்களது வாழ்க்கை வளத்திற்கு, நல்வாழ்விற்கு வழிகாட்டும் பொருள்கள் ஆகியவை பற்றிய நல்ல நூல்களைச் சேகரிப்பதில் கிராம நூலகங்களை அமைப்பவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். அத்தகைய நூல்களைத்தான் அவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்; மேலும் அந் நூல்கள் தாம் அவர்களது படிக்கும் ஆர்வத்தினைத் தூண்டிக் கொண்டே இருக்கும்.

### செய்திப் பலகை

கிராம மக்களுக்கு அன்றடச் செய்திகளை அறிவதில், நாட்டு நடப்புகளைப் புரிந்து கொள்வதில், உலகத்தில் நடப்பவற்றைத் தெரிந்து கொள்வதில் விருப்பம் இருக்கலாம். அத்தகையவர்களுக்கும் ஏனைய மக்களுக்கும் செய்திகளை அறிவிக்கும் செய்திப் பலகையினை ஒவ்வொரு நூலகமும் கொண்டிருக்க வேண்டும். முக்கிய செய்திகளை அன்றடம் நல்ல, நல்ல தாளில் கண்ணைக் கவரும் வண்ணம் எழுதி, அதனை மக்கள் கண்களில் படும்படி செய்தி அறிவுப்புப் பலகையில் ஒட்டி வைக்க வேண்டும்.

### காட்சிப்படங்கள்

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தீட்டப் பெறுகின்ற

திட்டங்களைப் பற்றி, கிராம மக்கள் நன்கு அறிந்து கொள்ளுதற் பொருட்டு, அத்திட்டங்களின் இயல்பையும் சிறப்பையும், அவை வெற்றி பெற்றால் நாம் அடையும் நன்மைகளையும், அவற்றால் நாட்டிற்குக் கிட்டும் பயன்களையும் விளக்குகின்ற காட்சிப்படங்களை அழகுற கிராம நூலகங்கள் தயாரித்து வைக்க வேண்டும். மக்களுக்கு அவற்றைக் காட்டுவதோடு, அவை பற்றிய விளக்கங்கள் அனைத்தையும், நூலகர் மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். விண்ணை முட்டி நிற்கும் மாமலைகள், நீர்வளம் சுரக்கும் பெரிய ஆறுகள், இயற்கை எழிலுடன் விளங்கும் காடுகள் ஆகியவை தரும் இயற்கைக் காட்சிகளை எழில் ஓவியங்களாகத் தீட்டி வைக்கலாம் அல்லது அவற்றைச் சித்தரிக்கும் ஒளி நிழற் படங்களை வாங்கி வைக்கலாம். இவற்றின் மூலம் மலைவளத்தை, ஆற்றின் சிறப்பை, இயற்கையின் எழில் கோலத்தை அவர்கள் நன்கு தெரிந்து கொள்ள முடிகின்றது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களையும் இவ்வாறு அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கலாம். அணைக்கட்டு, மின்சார நிலையம், போன்றவற்றின் ஒளி நிழற்படங்களையும் மக்கள் பார்வைக்கு வைக்கலாம். விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் வண்ணப் படங்களும் நூலகங்களில் அவசியம் இடம்பெறுதல் வேண்டும். இவற்றோடு, கிராம, மாவட்ட, மாநில, நாட்டு வரைப் படங்களையும் கிராம நூலகங்கள் வாங்கி வைக்க வேண்டும். அவை பற்றி அடிக்கடி நூலகத்தார் மக்களுக்குக் கூறவும் வேண்டும்.

### படக் காட்சிகள்

சமூக, அரசியல், பொருளாதார வளர்ச்சிகளைச் சித்தரிக்கும் படக் காட்சிகளை கிராம நூலகங்கள் அடிக்கடி மக்களுக்குக் காட்டி உதவலாம். அவ்வாறே விவசாய வளர்ச்சி விவசாய நுணுக்கங்கள் ஆகியவை பற்றிய செய்திப் படக் காட்சிகளையும் காட்டுவதற்கு அவை ஏற்பாடு செய்யலாம். ஆரோக்கிய வாழ்வு, உடல் நலம் பேணும் வகை ஆகியவை பற்றி மக்கள் நன்கு அறிந்து கொள்ளுதற் பொருட்டு அவை சம்பந்தமாக படக் காட்சிகளுக்கும் நூலகங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

### வானொலி பெட்டியும் தேவை

வானொலிப் பெட்டி ஒன்றும், ஒவ்வொரு நூலகத்தில் இருப்பது மிகவும் நல்லது. வானொலியில் ஒலிபரப்பாகும் இசை, நாடகம், சொற்பொழிவு, செய்தி முதலியவற்றை மக்கள் கேட்டு மகிழ்வதற்கு இது சிறந்த வாய்ப்பினை அளிக்கும். மாலை நேரத்தில் ஒவ்வொரு நாளும் ஒலி பரப்பாகும் கிராம நிகழ்ச்சியைப் போன்று

பல நிகழ்ச்சிகளை கிராம மக்களுக்காகத் தயாரித்து அவ்வப்பொழுது ஒலி பரப்புவதற்கு அகில இந்திய வானொலி நிலையத்தினர் ஏற்பாடு செய்ய வேண்டும். கிராம நூலகங்கள் இந்நிகழ்ச்சிகளை எல்லாம் முன்கூட்டியே தெரிந்து கொண்டு, அவற்றைப் பற்றி உரிய காலத்தில் கிராம மக்களுக்கு அறிவித்து, அவர்கள் அவற்றைக் கேட்டு மகிழும்படிச் செய்ய வேண்டும். அவை பற்றிய அறிக்கைகளை அறிவுப்புப் பலகையில் ஒட்டி வைக்க வேண்டும்.

### கிராம நூலகக் கட்டிடம்

கிராம நூலகம், கிராம ஊராட்சி அலுவலகத்தைச் சேர்ந்த அல்லது பள்ளிக்கூடத்திற்குரிய விசாலமான அறை ஒன்றில் அமைக்கப்படலாம். விசாலமான அறையில் நூலகம் இருந்தால்தான் மக்கள் எவ்விதச் சிரமமும் இன்றி அங்கு வந்து போக இயலும். மேலும் படக்காட்சிகள் நடத்துவதற்கும், சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்வதற்கும் அவ்வறை மிக வசதியாக இருக்கும். அவ்வறையில் இயற்கை வெளிச்சமும், காற்று வசதியும் இருக்கவேண்டும். அவ்வாறு இல்லையெனில், செயற்கை வெளிச்சத்திற்கும் காற்றிற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

### பயிற்சி பெற்ற நூலகர்கள்

கிராம நூலகங்கள் மக்களால் நன்கு பயன்படுத்தப்பட வேண்டுமெனில், அவ்வாறே மக்கள் அவற்றால் நல்ல பலன்களைப் பெற வேண்டுமெனில், கிராம நூலகங்கள் பயிற்சி பெற்ற நூலகர்களுடைய மேற்பார்வையில் அமைய வேண்டும். பயிற்சி பெற்ற நூலகர்களே அவற்றை நன்றாக நடத்த இயலும். எனவே, ''யாரையாவது நியமித்து, எப்படியாவது நடத்தலாம்'' என்ற எண்ணத்தை நாம் இனியாவது அறவே விடுத்து, அதற்கென பயிற்சி பெற்றோரே அவற்றைத் திறமையாக நடத்த முடியும் என்று எண்ண வேண்டும் நூலகப் பயிற்சி பெற்றோரே அவற்றைத் திறமையாக நடத்த முடியும் என்று எண்ண வேண்டும். நூலகப் பயிற்சி பெற்றோரையே கிராம நூலகங்களில் நூலகர்களாக நியமிக்க வேண்டும். இதற்கு மக்களும் அரசும் பெரும் ஆதரவு தரவேண்டும்.

பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வில் வெற்றிபெற்று, குறுகிய கால நூலகப் பயிற்சியினையும் முடித்தவர்களையே நூலகர்களாக நியமிக்க வேண்டும் அவர்களுக்கு உயர்நிலை எழுத்தர்களுக்குரிய ஊதியம் அளிக்க வேண்டும். இதற்குப் பொருளாதார நிலை இடங்கொடுக்க வில்லையெனில், பள்ளி ஆசிரியர் ஒருவரது பொறுப்பில் நூலகத்தை விட்டு விடலாம். அவருக்கு இதற்காக மேற்கொண்டு சிறிய ஊதியத்தைக் கொடுக்கலாம். ஊதியம் இல்லாது இருப்பின் அப் பணியை ஒருவரும் ஏற்க முன்வர மாட்டார்கள். அந்த ஆசிரியர்கள்,

நாளடைவில் நூலகப் பயிற்சி பெற்ருல் நல்ல பயனுள்ள நூலகப் பணிகளைச் செய்ய இயலும் என்பது பலரது கருத்து ஆகும். பொதுக் கல்வி அறிவு நூலகவியல் அறிவு ஆகியவற்ருேடு இப்பணியில் ஈடுபடுவோருக்கு, கிராமத்தின் அருமை பெருமைகள், நாட்டின் வளர்ச்சிக்குக் கிராமத்தின் பங்கு முதலியவை பற்றிய தெளிந்த அறிவும் இருத்தல் அவசியமானதாகும். மேலும் அவர்கள் பண்புடையவர்களாகவும், நமது நாட்டின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றுகின்ற புனித எண்ணத்தை உடையவர்களாகவும் இருக்க வேண்டும். இவற்றிற்கெல்லாம் மேலாக, கிராம மக்களது விருப்பு, வெறுப்புகளை எல்லாம் நன்கு அறிந்து, அவற்றிற்கேற்ப, பக்குவமாக அவர்களை நூலக உணர்வு உடையவர்களாக ஆக்குகின்ற திறனையும் உடையவர்களாக அவர்கள் இருத்தல் வேண்டும். தொழில் திறமை, பணி செய்யும் ஆர்வம், மனிதாபிமானம், மலர்ந்த முகத்துடன் பொறுமையாக நூலகத்திற்கு வருகின்ற மக்களை வரவேற்று, கனிவாகப் பேசி அவர்களுக்கு உதவுகின்ற இயல்பு,முதலியவை இப்பணியில் ஈடுபடுவோர்க்கு இருக்க வேண்டிய முக்கிய பண்புகள் ஆகும்.

மேலே கூறியவற்ருேடு பரந்த நூலறிவு, உயர்ந்த நோக்கம், பிறரைப் புரிந்து கொள்ளக் கூடிய திறன், பிறருக்கு வழிகாட்டுவதற்குரிய தன்னம்பிக்கை, வருங்காலத்தை நன்கு புரிந்து கொள்ளக்கூடிய திறமை, அதற்கேற்ப கிராம மக்களை வழி நடத்துகின்ற ஆற்றல், விட்டுக்கொடுக்கின்ற இயல்பு, உலகியலுக் கேற்பத் தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளுகின்ற பண்பு, பரிவு, சுறு சுறுப்பு, பணியில் ஆர்வம், அக்கறை, மகிழ்ச்சி, உண்மையான உழைப்பு, பிறரைத் தன்வயப்படுத்துதல் நன்னடத்தை, நல்ல பழக்க வழக்கங்கள், பிறரோடு ஒத்துழைக்கும் தன்மை, மேலதிகாரிகளுடைய நல்லெண்ணத்தைப் பெறுகின்ற வண்ணம் பணிசெய்தல் முதலியனவும் அவர்களிடம் காணப்படுமாயின் அவர்கள் சுடச்சுட ஒளிவிடும் பொன் போல் விளங்கும், பேரும் புகழும் பெறுவர். இவற்றிற்கெல்லாம், மேலாக பிறரது கண்டன உரைகளைப் பொறுக்கின்ற பொறையுடைமையும் அவர்களுக்கு இருக்க வேண்டும். இத்துடன் கிராமத்தில் வாழும் மக்கள் அனைவரையும் தனித்தனியாகச் சந்தித்து, அவர்களது எண்ணத்தை அறிந்து, அதற்கேற்ப அவர்கள் வழிகாட்டுவோர்களாயின், அது அவர்களுக்குச் சிறந்த வெற்றியைத் தேடித்தரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**பயன்படும் நூல்களும் பயிற்சி பெற்ற நூலகர்களும்**

கிராம நூலகங்களை மேற்பார்க்கும் பணியில் ஈடுபடுவோர்க்கு பரந்து விரிந்த அறிவு இருத்தல் நல்லது. நூலகவியல் அறிவோடு,

அரசியல் கட்சிகள், அமைப்புக்கள், ஆட்சிமுறை, கிராமச் சமூகஇயல், சமூகப் பொருளாதாரம், பிறப்பு, நோய் முதலிய சமுதாய நிலைப்புள்ளி விவரங்கள், கிராமங்கள், ஊர்கள், நகர்கள், ஆகியவற்றிடையே காணப்படும் வேறுபாடுகள் ஆகியவை பற்றிய அறிவும் அவர்களுக்கு இன்றியமையாததாக விளங்குகின்றது. ஆதாரக் கல்வியின் சிறப்பு, அக்கல்விக்குரிய பாடத் திட்டம், நூல்கள், புதிதாகப் படிக்கத் தொடங்கி இருக்கும் மக்களுக்குரிய நூல்கள் ஆகியவை பற்றியும் அவர்கள் நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

இறுதியாக, நூலகங்களைத் திறம்பட நடத்துகின்ற திறனும், அன்றாட வேலைகளை நல்ல முறையில் முடிக்கின்ற அநுபவமும், அரியவற்றை, நல்லவற்றை, கேட்போர் மனங்கொள்ளும் வண்ணம் எடுத்துக் கூறுகின்ற சொல் வன்மையும் அவர்களுக்கு இருத்தல் வேண்டும். இதுவரை கூறியவற்றால், கிராம மக்களுக்குப் பயன்படும் நூல்களையே கிராம நூலகங்கள் கொண்டிருக்க வேண்டும் என்பதும், பயிற்சி பெற்ற நூலகர்களே கிராம நூலகங்களைச் செம்மையுடன் நடத்த முடியும் என்பதும் இனிது பெறப்படும். கிராம நூலகங்கள் நமது தாய்த் திருநாட்டில் பல்கிப் பெருகவேண்டும். கிராம நூலகங்கள் பல்கிப் பெருகின் கிராம மக்கள் அறிவு வளரும். அறிவு வளரின், அவர்கள் ஆற்றும் பணிகள், தொழில்கள் ஓங்கும். தொழில்கள் ஓங்கின் வளம் பெருகும். பொருள் சிறக்கும். பொருள் சிறக்கின், மக்கள் மகிழ்ச்சியாக, அமைதியாக, வாழ முடியும். அவ்வாறு வாழின் நமது இந்தியநாடு இன்பப் பெட்டகமாக விளங்கும். எழில் கொழிக்கும் சோலையாக இலங்கும். வளம் சுரக்கும் அமுதசுரபியாக விளங்கி நமது நாட்டு மக்களது உறுபசியை, ஓவாப் பிணியை அகற்றும். நாட்டில் வளம் கொழிப்பின், நாட்டு மக்கள் நலமாக வாழின், உலகம் நமது நாட்டை வியந்து பாராட்டும், உலக அரங்கில் நமது நாட்டின் நிலை உயரும். நமது நல்ல கொள்கைகள் உலகெங்கணும் பரவும். அமைதி எங்கும் தவழும்! அறம் தழைக்கும்! அன்பு ஓங்கும்! அருள் ஆட்சி புரியும்! அகிலம் நிலைத்து வாழும்!

# 2. கிராம நூலக நூல்தொகுதி

கிராம நூலகங்களில் எத்தகைய நூல்கள் இடம் பெற வேண்டு-மென்பது பற்றி முதலில் பொதுவாகக் கூறப்பட்டது. எனினும் அது பற்றி ஒரு சிறிது விளக்கமாக இங்குக் கூறுவதில் தவறொன்றுமில்லை

கிராம மக்களது விருப்பம், தேவை ஆகியவற்றுக்கு ஏற்ப, கிராம நூலகத்தின் நூல்தொகுதி விளங்க வேண்டும். கிராம மக்களது தேவைகளையும் விருப்பங்களையும் நாம் நன்ருகத் தெரிந்து கொண்டால்-தான் அவர்களுக்கு உரிய நூல்களைத் தேர்ந்தெடுக்க முடியும். இது நூலகரின் தலையாய பணிகளில் ஒன்ருகும். கிராம மக்களை அவ்வப்-போது சந்தித்து அவர்களது தேவைகளை அவர் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். அத்துடன் கிராமத்திலுள்ள எல்லா அமைப்புக்-களுடனும் அவர் தொடர்பு கொண்டு கிராம மக்களுக்குத் தேவைப் படுகின்ற அறிவுச் செல்வங்களை அறிந்து கொள்ள வேண்டும். சுருங்கக் கூறின், கிராமத்தில் வாழும் மக்களில் கல்வி அறிவுடையவர்களது எண்ணிக்கை, அவர்களது தேவைகள், கல்வி அறிவினை வளர்த்துக் கொள்வதில் அவர்கள் காட்டும் அக்கறை ஆகியவற்றைப் பற்றிய பொது மதிப்பாய்வினை நூலகர் அவ்வப்போது செய்து அதற்கேற்ற-வாறு நூல்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கிராம நூலகத்திற்கு வாங்கப்படுகின்ற நூல்கள் பின்வரும் இயல்புகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

1. அந் நூல்கள் மக்கள் புரியக்கூடிய எளிய நடையில் எழுதப்-பட்டிருக்க வேண்டும். அத்துடன் அவைகள் பட விளக்கங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

2. மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய நிலையில் கருத்துக்கள் தெளிவாகவும் நேரடியாகவும் கூறப்பட்டிருக்க வேண்டும்.

3. அவைகள் மக்களது படிக்கும் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். மேலும், அவர்கள் ஏற்கனவே பெற்றிருக்கின்ற ஆர்வத்தை நாளும் வளரச் செய்ய வேண்டும்.

4. அந் நூல்கள் மக்களுடைய அன்ருட வாழ்க்கைச் சிக்கல்களை எடுத்துக் காட்டுவதோடு, அச்சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வழிகாட்டவும்

வேண்டும். மேலும், மக்கள் தங்களது பொது அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கும் தாங்கள் ஏற்கனவே பெற்றிருக்கின்ற கல்வி அறிவை வளர்த்துக் கொள்வதற்கும் துணை செய்ய வேண்டும். இவற்றுக்கெல்லாம் மேலாக நூல்களைப் படிப்பதன் மூலமாகத்தான் இவை அனைத்தையும் பெறமுடியும் என்ற நம்பிக்கையையும் அவைகள் மக்களுக்கு ஊட்ட வேண்டும்.

5. மக்கள் சிரமமின்றிப் படிப்பதற்குரிய முறையில் அவைகள் நல்ல முறையில் அச்சிடப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் மக்களது கண்களைக் கவரும் வண்ண அட்டைகளை அவைகள் கொண்டிருக்க வேண்டும்.

நூலகரும், நூலகக் குழுவின் உறுப்பினர்களில் ஒரு சிலரும் நூலகத்திற்குரிய நூல்களைத் தேர்ந்தெடுக்கலாம். நூல் கண்காட்சிகள் நடப்பின் நூலகர் அவற்றிற்குச் சென்று, நூல்கள் விற்பனைக்குக் கிடைப்பின், அவற்றை நூலகத்திற்கு வாங்கி வரலாம். அவ்வாறே அருகிலிருக்கும் நகர்களுக்குச் செல்லும் போது, அந்நகர்களிலிருக்கும் புத்தகக் கடைகளுக்குச் சென்று நல்ல நூல்களை வாங்கி வரலாம். நூல்களைப் பற்றிய செய்திகளைக் கிராம மக்களில் ஒரு சிலர் தெரிந்து வைத்திருக்கலாம். அத்தகையவர்களை நூலகர் அடிக்கடிக் கலந்துகொள்வது மிகவும் பயனுள்ளதாகும் இவற்றோடு நூலகர் பிற நூலகங்களுக்கும் அடிக்கடி சென்று நூல்களைப் பற்றிய விவரங்களை நன்கு அறிந்து கொள்ளலாம். நூல் வெளியீட்டாளர்கள் அவ்வப்பொழுது வெளியிடும் நூற்பட்டிகளும், பருவ இதழ்களிலும் நாளிதழ்களிலும் வெளியாகும் நூல் மதிப்புரைகளும், விளம்பரங்களும் நூல்களைத் தேர்ந்தெடுப்பதற்கு நமக்குப் பெரிதும் பயன்படுவனவாகும்.

ஓய்வு நேரத்தில் பல நூல்களைப் படிக்கும் பழக்கம் நூலகரிடத்தில் காணப்படல் வேண்டும். அதன் காரணமாக அவர் படிக்கின்ற நூல்கள் எந்த அளவிற்குத் தனது வாசகர்களுக்குப் பயன்பட முடியும் என்பதை அவர் நன்கு தெரிந்து கொள்ள முடியும். அவர் இத்திறமையைப் போற்றி நாளும் வளர்ப்பின், நல்ல நூல்கள், பயனுள்ள நூல்கள் எவை என்பதை எளிதில் தெரிந்து அவற்றைத் தனது நூலகத்திற்கு வாங்க இயலும். அடுத்து எப்பொருள்களைப் பற்றிய நூல்கள் கிராம நூலகத்திற்குத் தேவைப்படும் என்பது பற்றிக் கூறுவோம்.

பின்வரும் பொருள்களைப் பற்றிய நூல்கள் கிராம நூலகங்களுக்குத் தேவைப்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

1. சுகாதாரமும் உடல்நலம் பேணலும்
2. சமூக அறிவும் குடிமைப் பயிற்சியும்
3. வேளாண்மை
4. அன்றாட அறிவியல்
5. புராண, இதிகாசக் கதைகள்
6. சிறுகதைகள், நாடகங்கள், கவிதைகள்
7. கிராமப் பொருளாதாரம்
8. கிராமச் சமுதாய வாழ்வு
9. விலங்கியல்
10. வாழ்க்கை வரலாறு
11. நாடோடிப் பாடல்களும், கவிதைகளும்
12. சமயமும் தத்துவமும்
13. கிராமக் கைத்தொழில்கள்
14. வரலாறும், நிலவியலும்

மேற்கூறிய பொருள்களைப் பற்றிய நூல்களை மாத்திரம்தான் நாம் வாங்க வேண்டும் என்ற கட்டாயம் எதுவுமில்லை. தேவை இருப்பின் ஏனைய பொருள்களைப் பற்றிய நூல்களையும் நாம் அவசியம் வாங்கி வைக்க வேண்டும்.

அன்றாட நடப்புச் செய்திகளை அறிந்து கொள்வதற்குப் பெரிதும் துணைபுரிவன நாளிதழ்களாகும். அவைகள் செய்திகளைத் தருவதோடு நல்ல கட்டுரைகளையும் கொண்டுள்ளன. எனவே கிராம நூலகம் ஒருசில சிறந்த செய்தி இதழ்களை வரவழைக்க வேண்டும். மேலும், கிராமமக்களுக்கு ஏற்ற வகையில் வெளிவரும் பல எழுத்தாளர்களின் எழுத்தோவியங்களடங்கிய பருவ வெளியீடுகளையும் கிராம நூலகங்கள் வாங்க வேண்டும். கிராமத்திலுள்ள சில அமைப்புகளும், கிராம மக்களில் ஒருசிலரும் செய்தி இதழ்களையும் பருவ வெளியீடுகளையும் வரவழைக்கலாம். நூலகர் அவற்றையும் பெற்று நூலகத்தில் வைக்கலாம். அவற்றால் ஒருசிலர் நன்மைகளைப் பெறமுடியும்.

நூலகம் அமைந்திருக்கும் வட்டாரத்தைப் பற்றிய நூல்கள், கையெழுத்துச் சுவடிகள் முதலியவை கிடைக்குமாயின் அவற்றைப்

சேகரிப்பதில் கிராம நூலகம் ஆர்வமும் அக்கறையும் காட்ட வேண்டும். கிடைக்கின்ற அனைத்தையும் வாங்கி அவற்றைத் தனித் தொகுதியாக நூலகத்தில் வைக்க வேண்டும். ஏனெனில் கிராம மக்களில் பெரும்பாலோர் அவற்றைப் படிப்பதில் பெரிதும் ஆர்வமுடையவர்களாக இருப்பார்கள்.

கிராமத்தைச் சித்தரிக்கின்ற ஓவியங்கள், நிழற்படங்கள் ஆகியவற்றையும் கிராம நூலகம் சேகரித்து வைக்க வேண்டும். அத்துடன் கிராமத்தைப் பற்றிய செய்திகளடங்கிய கத்தரிக்கப்பட்ட செய்தி இதழ்த் துணுக்குகள், கிராம வளர்ச்சிக்குரிய திட்டங்கள், கிராமத்தைப் பற்றிய சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்குரிய வழிவகைகள் ஆகியவை பற்றி வெளியிடப்பெறும் அறிக்கைகள், கட்டுரைகள், பொது மதிப்பாய்வுகள், ஆராய்ச்சி முடிவுகள் அனைத்தும் கிராம நூலக நூல் தொகுதியில் இடம் பெறுதல் வேண்டும். இவை தவிர, திரைப்படம், வானொலி, காட்சி வில்லைகள் (Slides), காட்சி அட்டைகள் முதலிய செவி கட்புலச் சாதனங்களும் நூலகத்தில் இடம் பெறுதல் வேண்டும். இச்சாதனங்கள் எளிதானவை; விலைமலிவானவை. இவற்றை கிராம நூலகம் எளிதில் வாங்கி விடலாம். பிற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு திரைப்படக் காட்சிகள் போன்றவற்றிற்கும் கிராம நூலகம் ஏற்பாடு செய்யலாம் கிராம வானொலிச் சங்கம் போன்ற நிறுவனங்களுடனும் நூலகம் தொடர்பு கொண்டு, அவற்றின் நடவடிக்கைகளில் ஒத்துழைக்கலாம்.

கிராம நூலகங்களில் இடம் பெறத்தக்க நூல்களில் ஒருசிலவற்றின் பட்டி ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. இப் பட்டியலில் காணும் நூல்கள் தவிர, நிகண்டுகள், கலைக்களஞ்சியங்கள், அகராதிகள் ஆகியவற்றையும் அவசியம் நாம் வாங்கிவைக்க வேண்டும். ஆனால் ஒரு அடிப்படைக் கொள்கையினை நாம் என்றுமே மறக்கக் கூடாது. அதாவது எந்த நூலை நாம் வாங்கினாலும் அது கிராம மக்களுக்குப் பயன்படக் கூடியதாகவே இருக்க வேண்டும். அபிதான சிந்தாமணி, தமிழ்க் கலைக் களஞ்சியம், சூடாமணிநிகண்டு, சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில-தமிழ் அகராதி, கழகத் தமிழ்க் கையகராதி முதலியன குறிப்பிடத்தக்க, கலைக்களஞ்சிய, அகராதி, நிகண்டு நூல்களாகும்.

1. அண்ணா அறுபது நக்கீரன், அ. சென்னை, நன்னன் நிலையம், 1968 0-60.

2. அண்ணாவின் அரசு. தங்கவேலர், மா. சென்னை, அன்பு நிலையம், 1968. 1-00

3. அண்ணாவின் ஆறு கதைகள். சி. என். அண்ணாதுரை. திருச்சி, திராவிடப் பண்ணை, 1968 1-00.

4. அதிர்ஷ்ட நம்பர்கள். தமிழ்வாணன். சென்னை, லேணா பிரசுரம். 1968. 10.00

5. அப்பர் சுவாமிகள் சரித்திரம். கா. சுப்பிரமணியபிள்ளை. சென்னை, கழகம், 1970. 2-50.

6. அம்மை நோய்; எளிய சிகிச்சை முறைகள். எல்.எஸ். ஜனக குமாரி சென்னை, ஸ்டார், 1964. 1-00

7. அரசியல் வாரிசு. சி.என். அண்ணாதுரை. சென்னை, அன்னை பதிப்பகம், 1969. 0-75.

8. அற்ப வியாதியும் அனுபவ சிகிச்சையும். பதி2. எஸ்.ஏ. சூசை ராஜா. சென்னை, ஸ்டார், 1964. 1-50

9. அறம் உரைத்த அரசர். கா. கோவிந்தன். சென்னை, மலர் நிலையம், 1955 1–50.

10. அறிவியல் மருத்துவக் கட்டுரைகள். பதி 3. எச். செல்வராஜ் திருச்சி, ஜெர்மன் மெடிக்கல் சென்டர், 1963. 0-50

11. அறிவும் சிந்தனையும். க. அன்பழகன். சென்னை, புது வாழ்வுப் பதிப்பகம், 1954. 0–50

12. அன்னைக்கு. பதி 6. மு. வரதராசன். சென்னை, தாயக வெளியீடு, 1956. 1-00.

13. ஆட்சித் துறைத் தமிழ். கீ. இராமலிங்கம். சென்னை, கழகம், 1968. 5–00

14. ஆடு வளர்ப்பு. ச.கு. கணபதி ஐயர். சென்னை, அல்லயன்ஸ். 1956. 1-75.

15. ஆறறிவின் திகைப்பு கோமகள் சென்னை, பாரிநிலையம், 1969.

16. அனந்த வெள்ளம். சிறுகதைகள். வி. எஸ். சுப்பையா. சென்னை, பாரிநிலையம், 1970. 6-00.

17. இதயகீதம். இராம. அரங்கண்ணல். திருச்சி, திராவிடப் பண்ணை, 1952. 0 75.

18. இந்தியப் பறவைகள். தி. சுவாமிநாதன். சென்னை, மனோன்மணி புத்தக நிலையம், 1964. 2-50.

19. இந்திராகாந்தி. கே. எஸ். லட்சுமணன். சென்னை, அன்னை நிலையம், 1967. 2-00.

20. இந்து தருமமும் வாழ்க்கையும். எஸ். இராதா கிருஷ்ணன். குமாரகோமேதக வேலு, மொழி. திருச்சி, பழனியப்பா. 1967. 4.75

21. இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்; சங்க காலம். பதி. 2. சி. இலக்குவனார். புதுக்கோட்டை, வள்ளுவர் பதிப்பகம், 1966. 2-50

22. இரத்தக் கண்ணீர். மு. கருணாநிதி. திருச்சி, திராவிடப் பண்ணை, 1953. 2-00.

23. இலட்சிய வரலாறு. சி. என். அண்ணாதுரை, திருச்சி, திராவிடப்பண்ணை, 1957. 1 00

24. இன்பத் திராவிடம். சி. என். அண்ணாதுரை. வில்லிவாக்கம், பாரதப் பண்ணை, 1961. 1-50

25. உங்கள் ரேடியோ. பதி 3. திரு. நாராயணன். சென்னை, ஸ்டார், 1964. 1-25

26. உங்கள் விரல்களும் பலன்களும். ராஜம். சென்னை மனோன்மணி புத்தக நிலையம், 1966. 0-75

27. உடலும் உணவும். ஏ. கந்தசாமி. சென்னை, ஸ்டார், 1964. 1-25

28. உடைந்த ஆசை. இராம. அரங்கண்ணல். திருச்சி, திராவிட பண்ணை, 1953. 1-00

29. உணவு மருத்துவம். பதி 3. ச. கந்தசாமி முதலியார். சென்னை. பாரி நிலையம், 1965. 3-50.

30. உயிர்ச் சத்து உணவுகள். சீதாலக்ஷ்மி குயிலன். சென்னை குயிலன் பதிப்பகம், 1964. 2-00

31. உரிமைப் போர்; வில்லுப்பாட்டு. அ. திருமலைமுத்து சுவாமி, திண்டுக்கல், திண்டுக்கல் பப்ளிஷிங்ஹவுஸ், 1955. 0-50

32. உலக அறிஞர் சிந்தனைக் களஞ்சியம். பதி 2. ராமஸ்வாமி. சென்னை, வள்ளுவர் பண்ணை, 1969. 6-00.

33. உலகப் பெரியார் காந்தி. பதி 6. சி. என். அண்ணதுரை. திருச்சி, திராவிடப் பண்ணை, 1968. 1-00

34. உலகப் பெரும் பெண்ணரசிகள். பி. சி. கணேசன். சென்னை, வானதி, 1975-76. 1-50

35. உழைப்பால் உயர்ந்த நிதி; தமிழக முதல்வரின் வாழ்க்கை வரலாறு. தமிழ்ப் பித்தன். மதுரை, வெங்குப் பதிப்பகம்.

36. எதையும் தாங்கும் இதயம். கே. மதியழகன். சென்னை. புதுமைப் பிரசுரம், 1969. 3.00.

37. எப்பொழுதும் களைப்பாய் இருக்கிறதா? பதி 5. தமிழ்வாணன். சென்னை, மணிமேகலைப்பிரசுரம், 1963. 1-50

38. எல்லோரும் வாழ்வோம். நெ. து. சுந்தரவடிவேலு, சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1970. 2-00

39. எழுத்தின் கதை. பதி 4. மு. வரதராசன். சென்னை. தாயக வெளியீடு, 1966. 0.75.

40. கஞ்சியிலும் இன்பம். கி. வ. ஜகந்நாதன். சென்னை' அமுத நிலையம், 1949. 1.50.

41. கதை அரங்கம்; மணிக்கதைகள் - மதுரை, மீனாட்சி புத்தக நிலையம், 1961. 2-50.

42. கயத்தாற்றில் கட்டபொம்மன். பதி 3. ம. பொ. சிவஞானம். சென்னை, இன்பநிலையம், 1953. 0-25.

43. ஆங்கிலத் தமிழ்க் கையகராதி, பதி 2. க. அப்பாத்துரைப் பிள்ளை, சென்னை, கழகம், 1957. 3-25.

44. கலைஞர் கவிமணி மாலை. வேதா. சென்னை, வைரம் பதிப்பகம், 1970. 3-00

45 கவிஞர் கண்ட கலைஞர். மணிமொழி, பி. எல். ராஜேந்திரன், தொ. சென்னை, பூங்கொடி பதிப்பகம், 1970. 3-00

46 கவிஞர் தாகூர். பதி 6. மு. வரதராஜன். சென்னை. பாரி நிலையம், 1954, 0-87.

47 காட்டு மல்லிகை; நாட்டுப் பாடல்கள், தி. நா. சுப்பிரமணியன், சென்னை, அல்லயன்ஸ், 1952 1-50

48 காந்தியின் வாழ்க்கையிலே. பதி 2 எம். சண்முக சுந்தரம். சென்னை, வள்ளுவர் பண்ணை, 1969. 6-00.

49 கால்நடை நோய்கள். சுந்தரம் மீனாட்சி. கோயம்பத்தூர், மல்லிகா, 1963. 1-50.

50 கிராமப் பொருளாதாரம். .ஐ டி. சிதம்பரம். சென்னை, ஸ்டார், 1950. 1-25

51 கிராமாந்திரத்தில் கடன் வசதி, ரிசர்வ் பாங்க் பிரசுரித்துள்ள அறிக்கையின் சாரம். எஸ். எஸ். கே. சென்னை, சுதேசமித்திரன் புத்தகசாலை. 1-00

52 கிரிஸ்டல் ரேடியோ செய்வது எப்படி? எஸ். ஏ. ஆசைராஜா, சென்னை, வெல்டன், 1967. 1 00

53 குடும்ப வைத்தியம். மருத்துவ மணி. சென்னை, தமிழ்ப் பண்ணை, 1968. 2-50.

54 குழந்தைகளின் கண் நோய்கள். ஜே. ராஜசேகரன். நாகப்பட்டிணம், இமயப்பதிப்பகம், 1964. 1-00.

55 குற்றமும் தண்டனையும். மா. சண்முக சுப்ரமணியம். சென்னை, பாரி நிலையம், 1955. 0-63.

56 குறட்டை ஒலி. மு. வரதராஜன். சென்னை, தாயக வெளியீடு, 1956. 1-75.

57 கூட்டுறவும் நன்மைகளும். எஸ். மீனாட்சி. சென்னை, மனோண்மணி புத்தக நிலையம், 1967. 1 25

58 கூந்தல் கொட்டுகிறதா? ராஜம். சென்னை, மனோன்மணி புத்தக நிலையம், 1964. 1-25.

59 சம தர்மம். பதி. 3. சென்னை, அன்பு நிலையம், 1967. 1-50.

60. சமயக் கட்டுரைகள். சி. கணபதிப்பிள்ளை. யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைப் பழைய மாணவர்கள், 1961. 3-00

61. சமவாழ்வு. கு காமராஜ். சென்னை, வானதி, 1975-76. 5-00

62. சிலந்திக் கூடு. பதி. 2. ஏ. வி. பி. ஆசைத்தம்பி. சென்னை, கலைமன்றம், 1955. 1-00.

63. சிறப்போடு சிக்கனமாக வாழ்வது எப்படி? வேலவன், சென்னை வானதி பதிப்பகம், 1965. 2-00.

64. சிறுகதைகள். பதி. 3. திருச்சி, திராவிடப் பண்ணை. 1968. 1-00

65. தி. மு. க. இரா. நெடுஞ்செழியன். சென்னை, தமிழ்நாடு புத்தக நிலையம், 1961. 2-00.

66. சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம். பதி. 2. க. சுப்பிரமணிய பிள்ளை, சென்னை, கழகம், 1961. 2-50.

67. சைவ நன்னெறி, அ. திருமலை முத்துசுவாமி, மதுரை, மங்கை வெளியீடு, 1961. 3-00.

68. சொல்லின் கதை. பதி. 4. மு. வரதராசன். சென்னை, தாயக வெளியீடு, 1966. 0-75.

69. தங்கைக்கு. பதி. 8. மு. வரதராசன். சென்னை, தாயக வெளியீடு. 1966. 1-25.

70. தம்பிக்கு. மு. வரதராசன். சென்னை, தாயக வெளியீடு, 1964. 0-75.

71. தமிழ்ப் பத்திரிகைகள். க. பட்டாபிராமன். சென்னை, பட்டாபி வெளியீடு, 1968. 2-00.

72. தமிழ்ப்புலவர் அகராதி; புலவர் அகர வரிசை. ந. சி. கந்தையா பிள்ளை. சென்னை, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 1952. 5-00

73. சமையற்கலை. பா. 1, 2. கு. ப. சேது அம்மாள். சென்னை. வானதி, 1975-76. 6-00.

74. தமிழ் மருந்து மூலிகைகள் சம்பந்தம். சென்னை, வானதி, 1975-76. 2-00.

75. தாய்ப்பால். தாய். சென்னை, அல்லயன்ஸ், 1946. 1-00.

76. திருக்குறள் தெளிவுரை. மு வரதராஜன். சென்னை, கழகம், 1954. 1-25.

77. திருஞானசம்பந்தர் சரித்திரம். க. சுப்ரமணியபிள்ளை. சென்னை, கழகம், 1963. 2-50.

78. திரு. வி. க. மு. வரதராசன். சென்னை, திரு. வி. க. அறம், 19 1-00.

79. தூக்கம் வரவில்லையா? பதி. 2. தமிழ்வாணன். சென்னை, மணிமேகலைப் பிரசுரம். 1963. 2-00.

80. தென்னை வளர்ப்பு. ச.கு. கணபதி ஐயர். சென்னை, அல்லயன்ஸ், 1956. 1-50.

81. தேனி வளர்த்தலும் தேன் சேகரித்தலும். பதி. 4. மே. சக்கரவர்த்தி நயினார், பதி. கொழப்பலூர், குடிசைத் தொழில் பதிப்பகம், 1946. 1-00.

82. தையற்கலைக் கட்டுரைகள். கே. பி. சுந்தரம் சென்னை, பாரி நிலையம், 1958. 2-00.

83. தோட்டமும் வளர்ப்பு முறைகளும். இராம. வேதநாயகம். சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1966. 10-00.

84. தொழிலில் திரவியம். கே. ஜி. ராஜீ சென்னை, குமரர் பதிப்பகம், 1964. 5-00.

85. நச்சுக் கோப்பை. பதி. 4. வேலூர், திராவிடன் பதிப்பகம், 1954. 0-75.

86. நண்பர்க்கு. பதி. 7. மு. வரதராசன், சென்னை, தாயக வெளியீடு, 1967. 2-00.

87. நம்நாட்டு மூலிகைகள். பெ கு. சேகரன். சென்னை, தெராபி சென்டர், 1958. 0-50.

88. நமது தாய்மொழி. ந சி. கந்தையாபிள்ளை, சென்னை, ஆசிரியர் நூற் பதிப்புக் கழகம், 1948 0-50.

89. நமது தேசியக் கொடி. பதி.2. வெ. சாமிநாத சர்மா. சென்னை, பிரபஞ்ச ஜோதி நிலையம், 1955. 0-50.

90. நரை வழுக்கையைப் போக்க சில வழிகள். கே. எஸ். லட்சுமணன். சென்னை, உமா பதிப்பகம், 1964 1-25.

91. நலம் தரும் நாட்டு மருந்துகள். மு. வைதிலிங்கம். சென்னை, மனோன்மணி புத்தக நிலையம், 1964. 1-00.

92. நாடும் நாடகமும். மு. கருணாநிதி, திருச்சி, திராவிடப் பண்ணை, 1968. 1-00.

93. நினைவும் மறதியும். ந. முகமது செரிப். காரைக்குடி, மூவர் பதிப்பகம், 1966. 1-00.

94. நூல் நிலையம். அ திருமலை முத்து சுவாமி. சென்னை, பண்புப் புத்தகம், 1955. 1-25.

95. நூலகங்கள். ந. சி. கந்தையா பிள்ளை. சென்னை, ஆசிரியர் நூற் பதிப்புக் கழகம், 1948. 0-50.

96. நூலகப்பணி. வே. தில்லைநாயகம்.

97 நூலும் நூலகமும். பதி. 2. இராம. சுப்பிரமணியன். கோயம்பத்தூர், மெர்க்குரி பதிப்பகம், 1972. 2-00.

98. நூறுண்டுகள் வாழ்வது எப்படி? பதி. 5. தமிழ்வாணன், சென்னை, மணிமேகலைப்பிரசுரம், 1963. 1-50.

99. நோய் நீக்கும் கீரைகள். கே. எஸ். லட்சுமணன். சென்னை, அன்னை நிலையம், 1967. 1-25.

100. பசி; கட்டபொம்மன் வரலாற்றுக் கற்பனை. கே. ஜி. இராதா மணாளன். திருச்சி, திராவிடப் பண்ணை, 1957. 1-00.

101. பஞ்சாயத்து யூனியன் ஆட்சி முறை முல்லை முத்தையா, சென்னை, ஸ்டார். 1965. 2-50.

102. பஞ்சாயத்து தேர்தல் விதிகளும் நிர்வாகமும். முல்லை முத்தையா, தொ. சென்னை, கார்திகேயன், 1964 2-00.

103. பஞ்சாயத்து வழக்குகள். முல்லை பி. எல். முத்தையா, தொகு. சென்னை, ஸ்டார், 1966. 1-50.

104. படியாதவர் படும்பாடு. மு. வரதராசன். சென்னை, கழகம், 1940. 0-37.

105. பணம் தரும் தொழில் முறைகள் எஸ். ஏ. சூசைராஜா. சென்னை, அருணோதயம், 1968. 3-00.

106. பணம் வேண்டுமா? பதி. 4. தமிழ்வாணன். சென்னை, மணிமேகலை பிரசுரம், 1964. 2-50.

107. பந்தே கோழிகள். ச. கு. கணபதி ஐயர். சென்னை, கிராம ஜோதி நூல் நிலையம், 1955. 0-75.

108. பயன்தரும் தொழில் முறைகள் பதினைந்து. எஸ். ஏ. சூசைராஜா. சென்னை. ஔவை. நூலகம், 1959. 0-60.

109. பயிர்த்தொழில் பற்றி ஆயிரம் பயனுள்ள விபரங்கள். சி. ஆர். கண்ணன், தொகு. சென்னை, உமா, 1964. 3-00.

109. பல்பொருட் குண நூல். எஸ். எஸ். தேவர். சென்னை, கழகம், 1968. 2-00

110. பலே தங்கம்; குடும்பக் கட்டுப்பாடு. அ. சா. பாஷ்யம். வேலூர், ஆசிரியர், 1961. 0-75.

111. பழப் பாதுகாப்பு, அ. ராம் கோபால். சென்னை, கலைமகள், 1963. 3 00

112. பழமொழிகள். எஸ். என். கே. ராஜன். சென்னை, ராஜாராம் கந்தர், 1966 3-00

113. பழமொழியும் வாழ்வியலும் ப. முருகன். சென்னை. மனோன்மணி புத்தக நிலையம், 1965. 2.25

114. பாரதிதாசன் கவிதைகள்.

115. பாரதியார் கவிதைகள். சி. சுப்பிரமணிய பாரதியார். சென்னை, இளங்கோ பதிப்பகம், 1969. 5.00

116. பிள்ளைக் கனியமுது. கே. ஏ. மதியழகன். சென்னை, புதுமைப் பிரசுரம், 1969. 3.00.

117. புதிய பொலிவு. சி. என். அண்ணாதுரை. சென்னை, அருவிப் பதிப்பகம், 1963. 0-80

118. பெருமூச்சு. பகுதி 2. மு. கருணாநிதி. மாயூரம், இளங்கோ பதிப்பகம், 1953. 1-00.

119. போராட்டம். இரா. செழியன். சென்னை, மன்றம் பதிப்பக வெளியீடு, 1956. 2-25.

120. மண்வளம். பி. கோதண்டராமன். சென்னை, கிராம ஜோதி, 1951. 1-50.

121. மருத்து வேதகம். எஸ். எஸ். சுப்பிரமணிய ஐயர். சென்னை. ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 1955. 0-50

122 மறு கதைகள். வாசகர் வட்டம் (சென்னை), 1967. 6-00

123 மனிதனல்லாத மற்ற ஜீவ ஜந்துக்களின் பழக்க ஒழுக்கங்கள், டி. என். எஸ். இராகவாச்சாரி. சென்னை. ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம். 1950. 750-.

124. மாணிக்க விருந்து. ஜி. சுப்பிரமணிய பிள்ளை. சிதம்பரம். மணிவாசகர் நூலகம், 1967. 6-00

125. மிரக்கில்ஸ் ஆப் ஆயுர்வேதா (ஆயுர் வேதத்தின் அற்புதங்கள்). திருச்சி, ஜெர்மன் மெடிக்கல் சென்டர், 1964

126 முதலுதவி. அ. திருமலை முத்துசுவாமி. திண்டுக்கல், திண்டுக்கல் பப்ளிஷிங் ஹவுஸ், 1955. 1-25.

127. மொழியின் கதை படி. மு. வரதராசன். சென்னை, அன்னை, 1966. 0-75.

128. மேதைகளின் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள். தே. ப. பெருமாள். சென்னை, வானதி, 1970. 1-75.

129. ரப்பரின் கதை கே. எஸ். லட்சுமணன். சென்னை, அன்னை 1965 1-50.

130. ரேகை விளக்கம். ராஜா. வேதசிகாமணி நாடார். சென்னை, மனோன்மணி புத்தக நிலையம், 1965. 1-75.

131. வாத வைத்தியத்துக் காதி முதற்பாகம். வி. பலராமய்யா சென்னை, சுவாமி தீனதாஸ் சித்த மருந்து செய் சாலை, 1967 5 00

132. வான்வெளி வீரர்கள், தி. பாலசுப்பிரமணியன், அரு கிருட்டிண மூர்த்தி. தஞ்சாவூர், டி. என். சுப்பையா, 1963. 1-30.

133. விஞ்ஞானப் பெரியார்கள். பொ திரிகூட சுந்தரம் சென்னை, காந்தி நிலையம், 1952. 1-50

134. விடுதலையா? பதி 4. மு. வரதராசன். சென்னை, தாயக வெளியீடு, 1956. 1-25.

135. வாசகரும் வாகீசரும். பதி 2. ஜி. சுப்பிரமணிய பிள்ளை சிதம்பரம், மணிவாசகர் நூலகம், 1967. 3-00

136. வியாபாரத்தை விருத்தி செய்வது எப்படி? தமிழ்வாணன் சென்னை, மணிமேகலை, 1965. 2-00

137. வாருங்கள் பார்க்கலாம். கி. வா. ஜகந்நாதன், சென்னை, அமுத நிலையம், 1966. 7-50

138. வியாபார வெற்றிக்கு நூறு வழிகள். ஆனந்தன், சென்னை, அருணோதயம், 1964. 5-00

139. விஞ்ஞானத்தின் கதை. அ. திருமலை முத்துசுவாமி.

140. விவசாயக் களஞ்சியம் ஆர். ராமன். சென்னை, மனோன்மணி புத்தக நிலையம், 1967. 2-00.

141. விவசாய துணைத் தொழில்கள். சுந்தரம் மீனாட்சி. கோயமுத்தூர், மல்லிகா. 2-00.

142. வாழ்வில் வெற்றி பெறுவது எப்படி? சம்பந்தம். சென்னை, வானதி, 1975-76. 1-00

143. வீட்டுப் பறவைகள். ச. கு. கணபதி ஐயர். சென்னை, கிராம ஜோதி, 1951. 1-25.

144. வீட்டுப் பூச்சிகள். சுந்தரம் மீனாட்சி. கோயமுத்தூர், மல்லிகா. 1-00

145. வெற்றிகரமான வாழ்க்கை. பதி 2. எஸ். சரோஜா. சென்னை, பாரதி, 1963. 2-00.

146. வெற்றிலை. மங்களச் சின்னம். எம். ஆர். பாலகிருஷ்ணன். சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1966. 1-25

147. வெற்றிலைச் செல்வம். கே. எஸ். லட்சுமணன். சென்னை, வள்ளுவர் பண்ணை, 1964. 3.00.

148. வைட்டமின் காய்கறிகள். கே. எஸ். லட்சுமணன். சென்னை, அன்னை, 1967. 1-25.

# 3. கிராம நூலக ஆட்சி

## 1. நூல்களைப் பயனுற ஆக்கல்

நூல்களை விலைக்கோ, நன்கொடையாகவோ வாங்கிய பிறகு, அவற்றை வாசகர்கள் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு ஒழுங்கு படுத்துதல் அவசியம். முதலாவதாக, நூலகத்திற்குத் தேர்ந்தெடுத்த ஒவ்வொரு நூலையும் நூலடங்கலில் (Accession Register) பதிவு செய்தல் வேண்டும். நூல்கள் நூலகத்திற்கு வந்த வரிசைப்படி நூலடங்கலில் நூல்களைப் பதிவு செய்து, ஒவ்வொரு நூலுக்கும் நூல் வரிசை எண் (Accession Number) கொடுத்தல் வேண்டும். ஒவ்வொரு நூலைப் பற்றியும் நூலடங்கலில் பின்வரும் விவரங்கள் குறிக்கப்படுதல் வேண்டும்.

1. தேதி
2. நூல் வரிசை எண்
3. ஆசிரியர் பெயர்
4. நூலின் பெயர்
5. வெளியீட்டு இடம்; வெளியீட்டாளர் பெயர், வெளியிடப்-பட்ட ஆண்டு.
6. நூலின் விலை
7. யாரிடமிருந்து நூல் வாங்கப் பெற்றது.

நூலின் தலைப்புப் பக்கத்திற்குப் பின்புறத்திலும், நூலின் வேறு சில பக்கங்களிலும் நூல் வரிசை எண்ணை பெரிய எழுத்துக்களில் எழுத வேண்டும். நூலை விலைக்கு வாங்கி இருந்தால், விலைப்பட்டியலிலும் (Bill) நூல்வரிசை எண்ணை எழுத வேண்டும்.

## நூல்களை வகைப் படுத்துதல்

கிராம நூலகத்திற்குரிய நூல்களை மிக எளிய முறையில் பொருள் வாரியாக வகைப்படுத்தி தொகுத்தல் வேண்டும். பொதுவாக கிராம நூலகத்தில் இடம்பெறும் நூல்களின் எண்ணிக்கை குறைவாகவே

இருக்குமாதலால், அந்நூல்களை வகைப்படுத்தித் தொகுத்தல் பெரும் சிக்கலாக இராது. அமெரிக்க நாட்டு நூலகவியல் அறிஞர் மெல்வில் டுவி இயற்றிய வகைப்படுத்தும் முறையிலோ, டாக்டர். ரங்கநாதன் அவர்களது கோலன் (Colon) வகைப்படுத்தும் முறையிலோ கிராம நூலகருக்கு அனுபவம் இருக்குமானால், அவ்விரண்டில் ஏதாவது ஒன்றின் சுருக்க முறையைக் கையாளலாம்; இல்லையேல் பின்வரும் முறைப்படி நூல்களை வகைப்படுத்தலாம்.

| பொருள் | குறியீடு |
|---|---|
| 1 அன்றாட அறிவியல் | |
| [பூமி, சந்திரன், சூரியன், கிரகங்கள், பருவங்கள், காலவரிசை, ஒளி, வெப்பம், மின்சக்தி, எக்ஸ்-கதிர், காந்தம், அணுசக்தி, இரசாயனம், இயற்கை ஆராய்ச்சி, உயிரியல், பரிணாமம், தாவரங்கள்—மரங்கள், விலங்குயிர் வாழ்க்கை, பாலூட்டிகள், பறவைகள், மீன்கள், முதலியன,] | அ |
| 2 ஆய்வு உதவு நூல்கள் | |
| [அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், ஆண்டுக் குறிப்பேடுகள், நிலப்பட ஏடுகள், நாட்டுப் படங்கள் முதலியன.] | ஆ |
| 3 இலக்கியம் | இ |
| 4 உளவியல் | ஈ |
| [குழந்தை வளர்ப்பு, குமரப் பருவம், முதியோர் உளவியல், சமூக உளவியல், ஆளுமை முதலியன] | |
| 5 கணிதம் | உ |
| [எண்கணிதம், இயற்கணிதம், வடிவகணிதம், முதலியன] | |
| 6 கதை இலக்கியம் | |
| [நெடுங்கதைகள், சிறுகதைகள், நாடோடிக்கதைகள், தேவதைக் கதைகள் முதலியன] | |
| 7 கலை, கைத்தொழில் | உள் |
| [கலை, கட்டிடக்கலை, ஓவியம், சிற்பம், புகைப்படம், இசை, கைத்தொழில், சிறு தொழில்கள் முதலியன] | |

8 கால் நடைப் பராமரிப்பு. ஞா

9 சமயம் ஞ

[சமயம், புராண இலக்கியம், இந்து மதம், புத்தமதம், கிறிஸ்தவம், இஸ்லாம், முதலிய மதங்கள், வேதங்கள், கீதை, உபநிடதங்கள், விவிலிய நூல் முதலியன]

10 சமுதாய நலத்திட்டம் ஐ

11 சமூக அறிவியல் ஒ

[சமூகவியல், சமூகத்துடன் மனிதனின் உறவு, நாடு, அரசு, குடியுரிமை, சமூக மாறுதல், குடும்பம், பொருளாதாரம், சட்டம், வாணிகம், போக்குவரத்து, செய்தித் தொடர்பு, கல்வி, சமூக நலம் முதலியன]

12 சுகாதாரம் ஓ

[உடலமைப்பியல், உடலியல் நோய்களும் சிகிச்சை முறைகளும், முதலுதவி, தாதித்தொழில், உடல் நலம்-பேணல், உணவு, உறக்கம், உடை, இயற்கை வைத்தியம், பொதுச்சுகாதாரம், மனையியல், குழந்தை நலம், குடும்பக் கட்டுப்பாடு முதலியன]

13 நிலநூல் க

14 பயண இலக்கியம் ங

15 பொழுது போக்கு ச

[விளையாட்டு, உடற்பயிற்சி உட்பட]

16 பொறியியல் ஞ

[பயன் முறை அறிவியல், கண்டு பிடிப்புகள், வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, தந்தி, ஸ்புட்னிக், பாலங்கள், உந்துகள், விமானவியல், எந்திரவியல், மின்சார சாதனங்கள், சோப்பு, கண்ணாடி, பிளாஸ்டிக், உலோகம், துணி, ரப்பர் தயாரிப்பு முதலியன]

17 மொழியியல் ட

18 வரலாறு ஊ

[உலக வரலாறு, ஐரோப்பா, ஆசியா, ஆப்ரிக்கா வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கண்டங்களின் வரலாறு, இந்திய வரலாறு, உலகப் போர்கள், உலக நாடுகளிடையே உறவு, ஐ.நா. நிறுவனம், உலக சமாதானம் முதலியன]

19 வாழ்க்கை வரலாறு த

[விஞ்ஞானிகள், அறிஞர்கள், தலைவர்கள், வாழ்க்கை-வரலாறுகள், சுயசரிதைகள், நாட்குறிப்புக்கள், கடிதங்கள்]

20 வேளாண்மை ந

[மண், உரம், கலப்பு உரம், உழுதல், விதைத்தல், பயிர்நோய், பாசனம், அறுவடை, தோட்டக்கலை, பயிர்கள், காடுகள், மரம்நடுதல் முதலியன].

21 பல்வகை நூல்கள் ப

[முந்திய தலைப்புக்களில் சேராத பொருள்களைப் பற்றிய நூல்கள்].

மேற்கூறியவாறு ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு எழுத்தைக் குறியீடாகக் கொடுக்கலாம். ஒவ்வொரு பொருளிலும் அடங்கிய நூல்களுக்கு ஒன்று முதல் தொடர்ச்சியாக எண்களைக் கொடுக்கலாம். எடுத்துக்காட்டாக நூலகத்தில் ''வேளாண்மை'' என்னும் பொருள் பற்றி 50 நூல்கள் இருக்குமானால், அவற்றிற்கு ந1, ந2 .................. .. ந50 என்று குறியீடுகள் வழங்கலாம். இல்லையேல் ஆசிரியரது பெயரின் முதல் எழுத்தை இவ்வெண்ணிற்குப் பதில் சேர்க்கலாம். அதுவும் இல்லையேல் நூலின் பதிப்பாண்டினைச் சேர்க்கலாம்.

ஒரு நூலை வகைப்படுத்துவதற்கு முன்னர், அந்நூல் எந்தப் பொருள் பற்றியது என்பதை நூலகர் முதலில் தீர்மானிக்க வேண்டும். அதன்பின் அந்தப் பொருளுக்குரிய குறியீட்டைக் கொடுக்க வேண்டும். அக் குறியீட்டினை, நூலின் தலைப்புப் பக்கத்திற்குப் பின்புறத்திலும், மற்றும் ஏதாவது ஒரு பக்கத்திலும் பென்சிலால் எழுத வேண்டும்,

**நூலக நூற்பட்டி தயாரித்தல் :**

நூலகத்திலுள்ள நூல்களுக்கு நூற்பட்டி தயாரித்தல் இன்றி-யமையாத ஒன்றாகும். இந்நூற்பட்டி, ஒரு பதிவேடாகவோ (Register)

அல்லது தனித்தாள்களில் (Loose Sheets) எழுதி தொகுக்கப்பட்டதாகவோ (File) இருக்கலாம். ஒவ்வொரு பெருந்தலைப்புக்கும் (Main Subject) தனித்தனித்தாள் இருத்தல் வேண்டும். இத்தாள்களை, வாசகர்கள் எளிதாகப் பார்க்கும் வகையில் அறிவுப்புப் பலகையில் (Bulletin Board) பார்வையாக வைத்திருக்கலாம்.

நூலக நூற்பட்டியில் நூலைப்பற்றிய கீழ்க்காணும் விவரங்கள் அடங்கிருத்தல் வேண்டும் :

(1) வகைப் படுத்திய எண்

(2) ஆசிரியர் பெயர்

(3) நூலின் தலைப்பு

(4) நூல் வரிசை எண்

இவ்வாறு நூல்கள், நூலடங்களில் பதிவாகி, பொருள்வாரியாக வகைப்படுத்தி, நூலக நூற்பட்டியில் பதிவாகிய பின், அவை வாசகர்களின் பயனுக்கு ஆயத்தமாகி விடுகின்றன.

2. நூலக விதிகள்

கிராம நூலகத்திற்குச் சில விதிகளும் ஒழுங்கு முறைகளும் அவசியம். இவற்றைக் கிராம நூலகர் வகுக்க வேண்டும். இவ்விதிமுறைகள் பண்புள்ள மொழியில் அமைந்திருத்தல் வேண்டும். இந்த விதிகள் மிகக் குறைந்த அளவிலும், அதே சமயத்தில் நூலகத்தைப் பயன்படுத்துவதற்குத் தேவையான விவரங்களும் விளக்கங்களும் உடையனவாகவும் இருக்க வேண்டும். பின்வரும் விதிமுறைகளை முன் மாதிரியாகக் கொள்ளலாம். அந்தந்த ஊரின் சூழ்நிலைகளுக்குத் தகுந்தவாறு இவ்விதிகளில் தக்க மாறுதல்களைச் செய்து கொள்ளலாம்.

1. நூலகம் காலை/மாலை ......... மணிமுதல் காலை/மாலை ............ மணி வரை திறந்திருக்கும். ............ கிழமைகளும், நூலகக் குழுவினர் தீர்மானிக்கும் நாட்களும் விடுமுறை நாட்களாகும்.

2. ............ கிராமத்தில் அல்லது...... ...... ஊராட்சிப் பகுதியில் வசிக்கும் அல்லது வேலைபார்க்கும் ஆண், பெண், குழந்தைகள் (எட்டு வயதிற்கு மேற்பட்டவர்கள்) அனைவரும் நூலகத்தில் உறுப்பினராகலாம்.

3 ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு தடவையில் இரண்டு நூல்கள் கடனாகப் பெறலாம்.

4. நூல்கள் ஏழு நாட்களுக்குக் கடனாகக் கொடுக்கப்படும். மற்ற வாசகர்களுக்கு வசதியாக, உறுப்பினர்கள் குறிப்பிட்ட நாட்களுக்குள் நூல்களைத் திருப்பிக் கொடுத்து விடுதல் வேண்டும்.

5. ஆய்வு உதவு நூல்கள், பருவ இதழ்கள் போன்றவை சில குறிப்பிட்ட நிபந்தனைகளின்பேரில் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும்.

6. நூலகத்திற்குச் சொந்தமான நூல்களையும், மற்ற பிற பொருள்களையும் உறுப்பினர்கள் பத்திரமாகவும், சுத்தமாகவும் வைத்திருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. நூலகத்திற்குப் பொறுப்பாளராக நூலகர் இருப்பார். நூலகத்தைப் பயன்படுத்துவதற்கு அவருடைய உதவியையும் ஆலோசனையையும் உறுப்பினர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

3. உறுப்பினர்

நூலகத்தைக் கிராமத்திலுள்ளவர்கள் மிகப் பெருமளவில் பயன்படுத்தும்படி செய்வதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரும், சாதி, மத, வயது, தொழில், பால் பாகுபாடு இல்லாமல் நூலகத்தின் உறுப்பினர்களாவதற்கு ஊக்கமளிக்க வேண்டும். படிப்பறிவில்லாதவர்களுக்கும், குறைந்த படிப்பு உள்ளவர்களுக்கும் நூலகம் தனியாகச் செயல் முறைகளை வகுத்து, அவற்றில் அவர்கள் பங்கு கொள்ளுமாறு செய்தல் வேண்டும்.

நூலகத்தின் உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை வைத்திருக்க வேண்டும். இப்பட்டியலில் உறுப்பினரின் i) பெயர் ii) தந்தை பெயர், iii) முகவரி, iv) வயது ஆகிய விவரங்கள் முக்கியமாக இடம் பெற வேண்டும்.

4. நூல் வழங்கல்

நூல்களை உறுப்பினர்களுக்கு வழங்குவதும், அவர்களிடமிருந்து நூல்களைத் திரும்பப் பெறுவதும் நூலகப் பணியில் மிக முக்கியமானதாகும். நூல்களைத் தேர்ந்தெடுப்பதில் வாசகர்களுக்கு நூலகர் உதவி புரிய வேண்டும் எந்த வாசகருக்கு எந்த நூல் பொருத்தமானது என்பதை நூலகர் உணர்ந்திருக்க வேண்டும். புதிதாகக் கல்வி பயிலும் பெரியவர்களுக்கு நூல்களை வாசித்துக் காட்டியும் நூலகர் உதவி செய்யலாம்.

நூல்களை உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு ஒரு பதிவேட்டை வைத்திடுதல் உதவியாக இருக்கும். இப்பதிவேட்டில் i) வழங்கிய தேதி, ii) நூலாசிரியர், நூலின் தலைப்பு, iii) நூல் வரிசை எண், iv) நூல் வாங்குபவரின் கையொப்பம், v) நூலகரின் கையொப்பம். (நூலைத் திரும்ப வாங்கும் போது போடுவதற்கு) ஆகிய பத்திகள் வகுத்திருக்க வேண்டும்.

நூலை வழங்க வேறு சில முறைகளும் உண்டு எடுத்துக் காட்டாக, ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் அடையாள அட்டை கொடுத்து, நூலைக் கொடுக்கும்போது இவ்வட்டையை வாங்கிக் கொள்ளலாம். நூல் திரும்பி வரும்போது அட்டையை வாசகரிடம் கொடுத்து விடலாம் வாசகர் அட்டையில் பதிவுசெய்து கொண்டும் நூலை வழங்கலாம்.

நூல் வழங்குவதற்குரிய பதிவேட்டை அவ்வப்போது சரி-பார்த்து, எந்தெந்த நூல்கள் குறிப்பிட்ட நாட்களுக்குள் திரும்பி வரவில்லை என்பதை நூலகர் அறிந்துகொள்ள வேண்டும். பிறகு, அந்த நூல்களைத் திரும்பப் பெறுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராமத்தில் குறைந்த அளவு மக்களே இருப்பார்கள். அதனால் அவ்வூரிலுள்ள உறுப்பினர்களை நூலகர் நேரடியாக அறிந்து கொள்வது எளிது எனவே, நூலைத் திரும்பித் தராதவரிடம் நூலகர் நேரடியாகவே கேட்டு நினைவுபடுத்தி நூலை வாங்கிக் கொள்ளலாம். தாமதமாக நூலைத் திரும்பக் கொடுப்பவர்களிடமிருந்து இயன்றவரை அபராதம் வசூலிக்காமலிருத்தல் நல்லது.

5. **நூல்களைப் பேணல் :**

நூல்களுக்கு ஏதேனும் பழுது ஏற்படுமானால், அவற்றை உடனடியாகப் பழுதுபார்த்து, நூலுக்கு மேலும் சேதம் ஏற்படாமல் தவிர்க்க வேண்டும். வாசகர்களிடம் நூல்கள் இருக்கும் போது, அவர்கள் அந்நூல்களை எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்ற வழிமுறைகளை அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். வாசகர்களின் கூட்டத்தைக் கூட்டி, அக்கூட்டத்தில் அவர்களுடன் இச்சிக்கல்கள் குறித்து விவாதம் நடத்தலாம். இவ்வாறு எடுக்கப்படும் முடிவுகள் பயனுள்ளவையாக அமையும்.

6. **நூலக உதவியாளர்கள் :**

நூலக உறுப்பினர்களுள் ஒத்துழைக்கும் மனப்பாங்குள்ள ஊழியர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களை நூலகர் தமது பணிக்கு உதவியாக வைத்துக்கொள்ளலாம். இவ்விதம் உதவி

புரிவதன் மூலம், அந்த ஊழியர்களுக்குப் பயிற்சியும், சமுதாயத்திற்குச் சேவை செய்யும் மகிழ்ச்சியும் உண்டாகும். இவ்வாருக, நூலகர் தமது வேலைப்பளுவைக் குறைத்துக் கொண்டு, மற்ற முக்கியப் பணிகளில் கவனம் செலுத்தலாம்.

7. வாசகருக்கு உதவி :

நூலகத்தையும் நூல்களையும் பயன்படுத்துவதில் வாசகர்களுக்கு நூலகர் உதவ்புரிய வேண்டும். நூலகத்தின் எல்லா உறுப்பினர்களுடனும் அவர் நெருங்கிய தொடர்பு வைத்திருக்க வேண்டும். அவர்களுக்கு நண்பராகவும், வழிகாட்டியாகவும் விளங்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் தனியாக நூல்களை வாசித்துக் காட்டி உதவலாம். நூல்களைப் பற்றியும், நடப்பு விவகாரங்கள் குறித்தும் வாசகர்கள் கேட்கும் எளிய கேள்விகளுக்கு நூலகர் விடையளிக்க வேண்டும். இதற்குக் கிராமத்தில் தகுதியுடைய மற்றவர்களின் ஒத்துழைப்பையும் அவர் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு கேட்கப்படும் கேள்விகளையும், அவற்றுக்கு அளிக்கப்படும் பதில்களையும் பதிவு செய்து வைத்துக் கொண்டால் உதவியாக இருக்கும்.

8. பிற செயல் திட்டங்கள் :

பல்வேறு வகையான செயல் திட்டங்களைக் கிராம நூலகர் வகுத்துச் செயலாக்கலாம். இச்செயல் திட்டங்கள் சுவையுடையனவாகவும், நல்லறிவூட்டுவனவாகவும் அமைதல் வேண்டும். வாசகர்களின் அடிப்படையாக அக்கறைகளைச் சுற்றிச் சுழல்வதாகவும், அவர்களுடைய சிக்கல்களுக்குத் தீர்வு காண உதவுவனவாகவும் இச்செயல் திட்டங்கள் அமைந்திருக்க வேண்டும். ஊராட்சி மன்றம், கூட்டுறவுச் சங்கம், பள்ளி போன்ற உள்ளூர் நிறுவனங்களின் ஒத்துழைப்போடு இச்செயல் திட்டங்களை நூலகர் நிறைவேற்றலாம். கிராம நூலகத்திற்குரிய சில செயல் திட்டங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன. இவற்றுள் தகுந்தவற்றைத் தேர்ந்தெடுத்துச் செயலாக்கலாம்.

அ செய்தி இதழ் படித்தல் :

வாசகர்களைக் குழுவாகக் கூட்டி அவர்களுக்கு அன்றாடம் செய்தித்தாள்களை வாசித்துக் காட்டலாம். குழுவில் உள்ள ஒருவர் செய்திகளை உரக்கப் படிக்க, மற்றவர்கள் அதைக் கேட்கலாம். இவ்வாறு செய்திகளை படித்துப் பிறகு, முக்கியமான சிக்கல்கள் குறித்து அக்குழுவினர் தங்களுக்குள் விவாதம் நடத்தலாம்.

ஆ. கதை சொல்லுதல்:

வீரச் செயல்கள் பற்றிய கதைகள், புராணக் கதைகள், கிராம

வாழ்க்கை பற்றிய கதைகள் போன்றவற்றை உறுப்பினர்களுக்கு நூலகர் சொல்லலாம்; அல்லது ஒரு விருந்தினரை அழைத்து இக்கதைகளைக் கூறும்படி செய்யலாம்; அல்லது அக்குழுவில் உள்ள ஓர் உறுப்பினரே கதைகளைக் கூறலாம். நாட்டுப்புறக் கதைகள் கிராமியச் சூழ்நிலைக்கு மிகவும் சுவையுள்ளதாக இருக்கும். சுவையான கதைகள் அடங்கிய நூல்களின் பட்டியலை நூலகத்தில் காட்சிக்கு வைக்கலாம்.

இ. வாசகர் குழாம் :

நூல்களிலும், பருவ இதழ்களிலும் காணப்படும் சுவையான செய்திகளையும், சிறந்த கருத்துக்களையும் வாசித்துக் காட்டி, வாசகர்களுக்குப் படிப்பதில் ஊக்கம் உண்டாக்கலாம். இத்திட்டத்தில் படிப்பறிவில்லாதவர்களும், குறைந்த படிப்புடையவர்களும் பங்கு கொள்ளுமாறு செய்யலாம்.

ஈ. நாடகம் :

நாடகங்களை நடித்துக் காட்டுவதும், படித்துக் காட்டுவதும் கிராம மக்களுக்குச் சிறந்த பொழுது போக்காக அமையும். நாடகங்களைப் படிக்கும் பொழுது, அதில் பங்கு கொள்வோர் தங்கள் பாத்திரங்களை உரத்துப்படிக்க, மற்றவர்கள் அதைக் கேட்கலாம். இந்திய வரலாற்றின் சிறந்த பகுதிகளையும், சமயம், சமூகச் சீர்திருத்தம் பற்றிய காட்சிகளையும் நாடகமாக நடித்துக் காட்டலாம். நூலகத்திலுள்ள ஓரங்க நாடகங்களை இதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

உ. கலந்துரையாடல் :

சமுதாயச் சிக்கல்கள் பற்றிய பொருள்கள் குறித்து குழுவினராகக் கலந்துரையாடல்கள் நடத்தலாம். இத்தகைய கலந்துரையாடல்களுக்கு நூலகர் முன்னதாகவே திட்டம் வகுத்து, இக்குழுக்களின் தலைவர்களையும் தேர்ந்தெடுத்துவிட வேண்டும். மிகவும் கருத்து வேறுபாடுள்ள பொருள்களையும், உணர்ச்சியைத் தூண்டக்கூடிய சிக்கல்களையும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமலிருத்தல் நல்லது.

ஊ. செய்திப் பலகை :

முன்னர்க் கூறியபடி நூலகத்தில் செய்திப்பலகை ஒன்றை அமைத்து, அதில் அன்றாடம் முக்கியச் செய்திகளை எழுதிப் போடலாம். கிராமத்திலுள்ள சிலபொது இடங்களிலும் இத்தகைய செய்திப் பலகைகளை வைக்கலாம். மரப்பலகை கிடைக்காவிடில், சுவரில் கருப்பு வண்ணம் பூசி அதை எழுதுவதற்குப் பயன்படுத்தலாம்.

**கண்காட்சிகள் :**

நூல்களின் உறைகள், படங்கள், நாட்டுப்படங்கள், கேலிச் சித்திரங்கள், சுவரொட்டிகள், செய்தித் துணுக்குகள், பருவ இதழ்கள் முதலியவற்றைக் கொண்டு கண்காட்சிகளுக்கு ஏற்பாடு செய்யலாம். நூல்களையும் காட்சிக்கு வைக்கலாம். தரையிலும், சுவரிலும், காகிதத்திலும், துணியிலும், அட்டைகளிலும், வண்ணங்கள், வண்ணப் பொடிகள் முதலியவற்றைக் கொண்டு அலங்காரங்கள் செய்யலாம்.

**ஏ. சிறப்பு நிகழ்ச்சிகள் :**

தேசீய, சமூக, சமய விழாக்கள், தலைவர்களின் பிறந்தநாள் விழாக்கள் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளை நூலகம் கொண்டாடலாம். இவ் விழாக்களை நூலகம் தனது திட்டங்களைப் பரப்புவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இச்செயல் திட்டங்களை ஏற்பாடு செய்யும்போது, அவற்றில் பங்கு கொள்வோர்க்கு தங்களின் சொந்தத் திறனையும், அறிவாற்றலும் பயன்படுத்துவதற்குத் தக்க வாய்ப்பளித்தல் வேண்டும். நூலகர் அவர்களுக்கு வழிகாட்டியாகவும் ஆலோசகருமாக இருந்து, மற்றக் காரியங்களை அவர்களே செய்யும்படி விடுதல் வேண்டும். ஒவ்வொரு திட்டத்தையும் ஒரிருவரின் முழுப் பொறுப்பில் விட்டு விடலாம். இவ்வாறு செய்வதன் மூலம், நூலகத்துடனும் நூல்களுடனும் கிராம மக்கள் நேரடியாக நெருங்கிய தொடர்பு கொள்ளும்படி செய்ய முடியும்.